# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029500

1. District மாவட்டம் : புதுக்கோட்டை PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2017 FIR No. மு.த.அ. எண் 8/2017 Date: நாள் 12.10.2017

2. (i) Act சட்டம்: Cr.P.C and PC Act 1988 Sections பிரிவுகள்: 102 Cr.P.C and 8,
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(d)
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: of PC Act 1988
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 11.10.2017 Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1.45 h Time to : நேரம் வரை 18.30 h
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.10.2017 Time : நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம் அறந்தாங்கி 35 km தென்கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் [illegible] (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் [illegible]
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address முகவரி [illegible] புதுக்கோட்டை [illegible]

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) [illegible]

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்பட்டது:

இன்று (11–10–2017)ம் தேதி புதுக்கோட்டை மாவட்ட ஆய்வு குழு அலுவலரும், புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு பார்டியினரும் சேர்ந்து மதியம் 01.45 மணி முதல் 18.30 மணி வரை புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டதை தொடர்ந்து 21.00 மணிக்கு ஆய்வு குழு அலுவலர் கொடுத்த புகார் மனு பின்வருமாறு—

அனுப்புநர் திரு.அ.காலக்கண்ணன், வயது 53/2017, த/பெ. அருங்குளவன், தனி வட்டாட்சியர், குடிமை பொருள் வழங்கல் அலுவலகம், புதுக்கோட்டை மற்றும் ஆய்வுக்குழு அலுவலர், புதுக்கோட்டை, பெறுநர், காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, புதுக்கோட்டை, அய்யா, புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி மோட்டார்வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் பணியாற்றும் பொது ஊழியர்கள் வாகன ஓட்டுநர் உரிமம் வழங்கல், பதிவு சான்று வழங்கல் போன்ற அலுவலக பணிகளை செய்வதற்காக இடைத்தரகர்கள் மற்றும் ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS .................................... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ....................
Rank: நிலை .................... No. எண் ....................

பணியாளர்கள் மூலம் பொது மக்களிடம் இருந்து கையூட்டு பெற்று வருவதாக கிடைத்த தகவலின் பேரில் 11.10.2017ஆம் தேதி நானும், திரு.திருநாவுக்கரசு, தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திருமயம் தாலுகா மற்றும் காவல் துணைக்கண்காணிப்பாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு புதுக்கோட்டை மற்றும் காவல் குழுவினர்களுடன் இணைந்து திடீர் சோதனை மேற்கொண்டோம். சோதனையின் போது திருமதி.அனிதா, மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை –1, எல்காட் அலுவலர் திரு.கார்த்திகேயன், காசாளர் திரு.வெங்கிடுசாமி மற்றும் புரோகிராமர் திரு.சந்திரசேகரன் மற்றும் அலுலவக உதவியாளர் திரு.பாண்டி செல்வம் ஆகியோர் அலுவலில் இருந்தனர்.

இவர்களைத் தவிர மோட்டர் வாகன ஆய்வாளர் அறைக்கு எதிரே இருந்த ஹாலில் 1. திரு.முருகன், த/பெ கருப்பையா, உரிமையாளர் ஸ்ரீ முருகன் ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி, 2, திரு.தாஜுதீன், த/பெ அப்துல் ரகுமான் உரிமையாளர், பரகத் ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி, 3.திரு.ரமேஷ், த/பெ வெங்கட்ராமன் உரிமையாளர், சிங்கப்பூர் ஒட்டுநர் பயிற்சிப்பள்ளி, 4.திரு.சரவணன், த/பெ ஆறுமுகம், உரிமையாளர், பாரதி ஒட்டுநர் பயிற்சி பள்ளி, 5, திரு.இளங்கோ, த/பெ மாரிமுத்து, உரிமையாளர் இளங்கோ ஒட்டுநர் பயிற்சி பள்ளி, 6.திரு.எம்.ராமச்சந்திரன், த/பெ முருகன், உரிமையாளர், சசி ஒட்டுநர் பயிற்சி பள்ளி, 7.திரு.அருண்குமார், த/பெ அறிவானந்தன், உரிமையாளர், அண்ணா ஒட்டுநர் பயிற்சி பள்ளி, 8.திரு.எம்.விக்னேஷ், த/பெ முருகேசன், உரிமையாளர், குமார் ஒட்டுநர் பயிற்சி பள்ளி, 9. திரு.ஆர்.ராஜா தேசிங்கு, த/பெ ராஜ ரத்தினம், மேலாளர், பரகத் ஒட்டுநர் பயிற்சி பள்ளி, 10.திரு.நாசர், த/பெ முகமது அக்பர், புரோக்கர், அறந்தாங்கி, 11.திரு.சுஷேந்திரன், த/பெ ராமச்சந்திரன், உதவியாளர், துரை ஒட்டுநர் பயிற்சிப்பள்ளி, புதுக்கோட்டை, 12. திரு.சி.பாலமுருகன், த/பெ சந்திரன், சேல்ஸ்மேன், ஸ்ரீராம் ஆட்டோஸ், அறந்தாங்கி, 13.திரு.ஆர்.வினோத், த/பெ ரவீந்திரன், உதவியாளர், ஸ்ரீமுத்து மாரி ஏஜென்சிஸ், மணமேல்குடி 14.திரு. தமிழரசன், த/பெ சிவலிங்கம், உதவியாளர், செந்தில் மோட்டார்ஸ், கீரமங்கலம் ஆகியோர்கள் நின்று கொண்டிருந்தனர்.

மோட்டர் வாகன ஆய்வாளரிடம் அலுவலக personal cash register கேட்க அவர் காசாளரிடமிருந்து பெற்று ஆஜர் செய்ததை தணிக்கை செய்ய அதில் திரு.வெங்கிடுசாமி என்பவர் ரூ.100/–ம், திரு.பாண்டிசெல்வம் ரூ.300/– மற்றும் திரு.சந்திரசேகர் ரூ.100/–ம் சொந்த செலவுக்கு எடுத்து வந்ததாக எழுதப்பட்டு கையொப்பம் செய்துள்ளனர். அதில் எல்காட் ஊழியர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆகியோர் எந்த பதிவும் மேற்கொள்ளவில்லை. இன்றைய தின கட்டண

விபரத்தை காசாளர் திரு.வெங்கிடுசாமியிடம் கேட்கும் போது 03.10.2017 முதல் 10.10.2017ஆம் தேதி வரை உள்ள 1 சதவீத நல வரித்தொகை ரூ.1970/– என்றும், இன்றைய தினத்தில் (11.10.2017) வசூல் செய்த பதிவு கட்டணம் மற்றும் வரி, பசுமை வரி, இணக்கக்கட்டணம், சாலை பாதுகாப்பு வரி, சேவை வரி மற்றும் நலவரி ஆக மொத்தமாக ரூ.32,594/–க்கான கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட அறிக்கை நகலை கொடுத்தார். அதனை தணிக்கைசெய்ய மேற்கண்ட தொகையான ரூ.32,594/–ல் ரூ.334/– குறைவாக இருந்தது. 03.10.2017 முதல் 10.10.2017ஆம் தேதி வரை வசூல் செய்த 1 சதவித நல வரித்தொகை ரூ.1970/– சரியாக இருந்தது. குறைவாக இருந்த ரூ.334/–ஐ பற்றி இளநிலை உதவியாளர்/ காசாளரிடம் விளக்கம் கேட்க, அய்யன் டிரைவிங் ஸ்கூல் ஓனர் திரு.முருகன் பீஸ் அடித்துவிட்டு பணம் தராமல் சென்றுவிட்டார் என்றும், பிறகு அப்பணத்தை வாங்கி கொள்ளலாம் என்று இருந்தேன் என்று கூறினார். எனவே மேற்கண்ட பணம் ரூ.32,260/–ம் வங்கி செலுத்த இளநிலை உதவியாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் புரோகிராமர் திரு.சந்திரசேகரிடம் இன்றைய தினம் வசூல் செய்த தொகையை பற்றி கேட்க ரூ.87,470/–ஐ வசூல் செய்ததாகவும், அதற்கான விபரத்தை கணினியில் இருந்து பதிவிறக்கம் செய்து எடுத்து கொடுத்தார். அந்த தொகையை தணிக்கை செய்ய சரியாக இருந்தது. அந்த பணத்தை வங்கியில் செலுத்த அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அலுவலக பொது வருகைப்பதிவேட்டை ஆய்வு செய்ததில் அதில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–1 திருமதி.அனிதா, 2.திரு.வெங்கிடுசாமி, இளநிலை உதவியாளர், 3.திரு.பாண்டிசெல்வன், அலுவலக உதவியாளர் ஆகியோர் கையொப்பம் செய்தும் மற்றொரு வருகைப்பதிவேட்டில் கணினி அலுவலர் திரு.கார்த்திகேயன் மற்றும் திரு.சந்திரசேகர் ஆகியோர் கையொப்பம் செய்துள்ளனர். மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.அனிதா அவர்களை பெண் காவல் ஆய்வாளர் திருமதி.பங்கஜம் மூலம் சோதனை செய்ய மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.அனிதா அவர்கள் அணிந்திருந்த காக்கி நிற பேண்டின் இடது புற பாக்கெட்டில் இரண்டு ஐநூறு ரூபாய் நோட்டுகளாக மொத்தம் ரூ.1,000/– இருந்தது. அவரிடம் அப்பணத்தை பற்றி விபரம் கேட்க அதற்கு அவர் மேற்படி பணம் தான் பயன்படுத்தும் அரசு வாகனம் டி.என்.55 G 0613 என்ற பொலிரோ வாகனத்திற்கு டீசல் போடுவதற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவரிடமே ரூ.1,000/–ஐ திருப்பி கொடுக்கப்பட்டது.

இளநிலை உதவியாளர் திரு.வெங்கிடுசாமி என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.60/– இருந்தது. அவரிடம் விசாரிக்க காலையில் செலவுக்காக ரூ.100/– எடுத்து வந்ததாகவும், செலவு போக மீதி பணம் ரூ.60/– இருப்பதாக கூறினார். அந்த

பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. புரோகிராமர் திரு.சந்திரசேகரை சோதனை செய்ய அவரிடம் ரூ.60/– இருந்தது. அவரிடம் விசாரிக்க காலையில் செலவுக்காக ரூ.100/– எடுத்து வந்ததாகவும், செலவு போக மீதி பணம் ரூ.60/– இருப்பதாக கூறினார். எல்காட் ஊழியர் திரு.கார்த்திகேயன் என்பவரை சோதனை செய்ய அவரது சட்டைப்பையில் 'ரூ.700/– இருந்தது. மேலும் அவரது அறையில் சோதனை செய்ய அவரது இருக்கைக்கு பின்புறம், இருக்கைக்கு கீழ் மற்றும் பீரோவிற்கு பின்புறம், இன்வெட்டர் பேட்டரிக்கு பின்புறம் மற்றும் வலது புற ஜன்னல் ஓரமாக கத்தை கத்தையாகவும் மற்றும் சிதறியும் ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. அவற்றை எடுத்து எண்ணி பார்க்க ரூ.26,840/– இருந்தது. இதுபற்றி விளக்கம் கேட்க விளக்கம் ஏதுவும் கூறாமல் மவுனமாக இருந்தார். மேலும் விசாரிக்க ஹாலில் நின்று கொண்டிருந்த டிரைவிங் ஸ்கூல் உரிமையாளர்கள் தூக்கி போட்டதாக கூறினார். அந்த பணம் ரூ.26,840/– கைப்பற்றப்பட்டது. ரூ.700/–ஐ பற்றி கேட்க அவரதுசொந்த பணம் என்றும், வீட்டிலிருந்து கொண்டு வந்ததாக தெரிவித்தார். அப்பணம் ரூ.700/–ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலக உதவியாளர் திரு.பாண்டிசெல்வத்தை சோதனை செய்ய ரூ.300/– இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க தனது சொந்த பணம் என்றும், காலையில் பதிவேட்டில் பதிந்துள்ளதாக தெரிவித்தார். அந்தப்பணம் ரூ.300/– அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

ஹாலில் நின்று கொண்டிருந்த முருகன் டிரைவிங் ஸ்கூல் உரிமையாளர் திரு.முருகன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.16,500/– இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க டெஸ்டுக்கு கட்ட வேண்டிய பணம் என்று கூறினார். இது சம்மந்தமாக உதவியாளர்/காசாளர் மற்றும் புரோகிராமர் ஆகியோரிடம் பணம் செலுத்துவதற்கான கால அளவு பற்றி விபரம் கேட்க போக்குவரத்து ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி காலை 09.00 மணியிலிருந்து மதியம் 01.00 மணி வரை மட்டுமே பணம் செலுத்த முடியும் என்றும், அதன்பிறகு வசூலான தொகையை 01.30 மணிக்குள் வங்கியில் செலுத்த வேண்டும் என்று தெரிவித்தார். இதனை திரு.முருகனிடம்கேட்க 'அவர் கூறிய விளக்கம் ஏற்கதக்கதாக இல்லை. அதனால்அந்த பணம் ரூ.16,500/–ம் கைப்பற்றப்பட்டது. பாரக்கத் ஒட்டுநர்பயிற்சிப்பள்ளி உரிமையாளர் திரு.தாஜூதீனை சோதனை செய்ய அவரிடம் எந்த பணமும் இல்லை. சிங்கப்பூர் ஒட்டுநர் பயிற்சிப்பள்ளி உரிமையாளர் திரு.ரமேஷ் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.3,800/– பணமும், 5 பேருக்கு பீஸ் கட்டிய சலானும் (6046904 முதல் 6046908) இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க பீஸ் கட்ட வேண்டிய பணம் என்று கூறினார். பீஸ் கட்ட வேண்டிய நேரம் முடிந்துவிட்டதால் அவர் கூறிய விளக்கம் ஏற்கதக்கதல்ல என்பதால், அந்த பணம் ரூ.3,800/–ம் கைப்பற்றப்பட்டது.

பாரதி ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி உரிமையாளர் திரு.சரவணனை சோதனை செய்ய அவரிடம் ரூ.5,650/- பணமும், 10 பேருக்கு பீஸ் கட்டிய சலானும் (6046858 முதல் 6046867) இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க பீஸ் கட்ட வேண்டிய பணம் என்று கூறினார். பீஸ் கட்ட வேண்டிய நேரம் முடிந்துவிட்டதால் அவர் கூறிய விளக்கம் ஏற்கதக்கதல்ல என்பதால், அந்த பணம் ரூ.5,650/-ம் கைப்பற்றப்பட்டது. இளங்கோ ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி உரிமையாளர் திரு.இளங்கோவை சோதனை செய்ய அவரிடம் ரூ.25,300/- பணம் இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க மணமேல்குடியில் உள்ள மங்களம் பைனான்ஸ் நிறுவனத்தில் பணம் கட்டுவதற்காக எடுத்து வந்த பணம் என்று கூறினார். மணமேல்குடி பைனான்ஸில் பணம் கட்டுவதற்கு ஏன் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு வந்தீர்கள் என்று கேட்க, அதற்கு அவர் சரியான விளக்கம் கூறவில்லை. எனவே அந்த பணம் ரூ.25,300/-ம் கைப்பற்றப்பட்டது. துரை ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி உதவியாளர் திரு.சுரேந்திரனை சோதனை செய்ய அவரது கைப்பையில் ரூ.13,890/- பணமும், அத்துடன் டி.என்.33 W 1789 என்ற வண்டிக்கு பர்மிட் மற்றும் புதுப்பித்தல் சம்மந்தமான கோப்பு, அதில் 05.10.2017ஆம் தேதி பர்மிட் புதுப்பித்தலுக்காக ரூ.1,750/-ஐ சலான் எண்.ஜே.8834135ன் படி செலுத்தியுள்ளார். மேலும் எப்.சிக்கான சர்வீஸ் சார்ஜ் ரூ.50/- சலான் ஓ.6043897ன் படி செலுத்தியுள்ளார். மேலும் எப்.சி கட்டணம் ரூ.950/- சலான் எண்.ஓ.6047561ன் படி செலுத்தியுள்ளார். மேலும் எப்.சி அட்டை வாங்குவதற்காக வந்ததாகவும் தெரிவித்தார். பணத்திற்கான விபரம் கேட்க எந்தவிதமான விளக்கமும் கூறாமல் மவுனமாக இருந்தார். எனவே அந்த பணம் ரூ.13,890/-ம் கைப்பற்றப்பட்டது.

தனி நபர் (இடைதரகர்) திரு.நாசரை சோதனை செய்ய அவரிடம் ரூ.33,530/- பணம் இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க தான் மேற்படி மோட்டார் வாகன அலுவலகத்தின் முகப்பில் அக்பர் என்ற பெயரில் ஆன்லைன் சர்வீஸ் வைத்திருப்பதாகவும், மேலும் இடைத்தரகராக செயல்படுவதாகவும், இன்றைய தேதியில் (11.10.2017) 3 வண்டிக்கு 1. டி.என்.72 ஏ.டி 7349க்கான சாலை வரி ரூ.2,358/-ம் 2. டி.என்.67 எல் 7932க்கான சாலை வரி ரூ.4,858/-ம் 3. டி.என்.55 ஏ.டி 5643க்கான சாலை வரி ரூ.2,510/-ம் (மொத்தம் ரூ.9,726/-) ஆன்லைனில் செலுத்திய தொகை என்றும் கூறினார். மீதி பணத்திற்கு விளக்கம் கேட்க அதில் ரூ.4400/- வேககட்டுப்பாட்டு கருவி விற்ற பணம் என்று கூறினார். அதற்கான பில்லை கேட்க அவர் ஆஜர் செய்யவில்லை. மேலும் மீதி தொகைக்கான விளக்கம் சரியாக கூறாததால் மேற்படி பணத்தில் சாலை வரி செலுத்திய ரூ.9,726/-ஐ மட்டும் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மீதி பணம் ரூ.23,804/-ஐ கைப்பற்றப்பட்டது. அண்ணா ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி உரிமையாளர் திரு.அருண்குமாரை சோதனை செய்ய அவரிடம் ரூ.605/-

பணம் இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க 4 எல்.எல்.ஆர் போட வந்ததாகவும், அதற்கான பணம் காலையில் கட்டியதாகவும் பணம் கட்டிய ரசீதை டிரைவிங் ஸ்கூலில் வைத்துவிட்டு, விண்ணப்பத்தாரரை போட்டோ எடுக்க அழைத்து வந்து அவர்களை கீழே நிற்க வைத்துவிட்டு வாகன ஆய்வாளரை பார்க்க வந்ததாகவும், அந்த பணம் காலையில் பீஸ் கட்டியது போக மீதி பணம் என்றும், அது எனது சொந்த பணம் என்றும் கூறினார். அவரது விளக்கம் ஏற்கதக்கதாக இல்லாததால் அந்த பணம் ரூ.605/– கைப்பற்றப்பட்டது.

மணமேல்குடியில் உள்ள குமார் ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி உதவியாளர் திரு.விக்னேஷை சோதனை செய்ய அவரிடம் ரூ.1,830/– பணம் இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க அவரது ஓனர் தன்னிடம் ரூ.7,000/– கொடுத்து அனுப்பியதாகவும், அதில் 4 எல்.எல்.ஆர்க்கு பணம் ரூ.1,020/–செலுத்தியதாகவும் (சலான் எண். ஒ.6046896 முதல் 6046898, ஒ.6046910) மற்றும் 4 மோட்டார் சைக்கிள் டெஸ்ட் பீஸாக ரூ.3,200/– (சலான் எண்.ஒ.6046892 முதல் 6046895), 2 பேட்ஜ் பீஸ் ரூ.630/– (சலான் எண்.ஒ 6046893, ஒ.6046852) 1 லைசென்ஸ் புதுப்பித்தல் ரூ.700/– (சலான் எண்.ஒ.6046891) பணம் என்றும் கூறினார். தான் பீஸ் கட்டிய பணம் ரூ.5,550/– போக சொந்த பணம் ரூ.380/– சேர்த்து மொத்தம் பணம் ரூ.1,830/– வைத்திருந்ததாக கூறினார். சொந்த பணம் ரூ.380/– போக மீதி பணம் ரூ.1,450/–க்கான விளக்கம் சரியாக கூறாததால் அப்பணம் கைப்பற்றப்பட்டது. பரகத் ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி மேலாளர் திரு.ராஜதேசிங்கை சோதனை செய்ய அவரிடம் ரூ.60/– பணம் இருந்தது. அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

சசி ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி உதவியாளர் திரு.ராமச்சந்திரனை சோதனை செய்ய அவரிடம் ரூ.10/– பணம் இருந்தது. மேலும் அவரிடம் விசாரிக்க லைசென்ஸ் புதுப்பித்தல் மற்றும் எல்.எல்.ஆர் போட அலுவலகம் வந்ததாகவும், அதற்கான பீஸ் தொகை காலையில் செலுத்தியதாகவும் அதற்கான சாலன் எண். ஒ.6046887 முதல் ஒ.6046889 காட்டியதால் மேற்கண்ட ரூ.10/–ம், சலானும் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. திரு.வினோத், பணியாளர், ஸ்ரீமுத்துமாரி ஏஜென்ஸிஸ், மணமேல்குடி என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.1,630/– பணம் இருந்தது. மேலும் அவரிடம் விசாரிக்க தனது கம்பெனிக்காக லேட் பீஸ் கட்டுவதற்காக வாகன ஆய்வாளர் அலுவலகம் வந்ததாகவும் தெரிவித்தார். எத்தனை வண்டிக்கு லேட் பீஸ் கட்ட வேண்டும் விபரம் கேட்க அதற்கு அவர் சரியான விளக்கம் கூறாததால் பணம் ரூ.1,630/– கைப்பற்றப்பட்டது.

திரு.பாலமுருகன் பணியாளர், ஸ்ரீராம் ஆட்டோஸ், அறந்தாங்கி என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.1,580/- பணம் இருந்தது. மேலும் அவரிடம் விசாரிக்க காலையில் என்னுடன் பணிபுரியும் பணியாளர் திரு.குமார் என்பவர் 3 இரு சக்கர வாகனத்திற்கு பதிவு கட்டணம் செலுத்திவிட்டு வந்தததாகவும், தான் அதன் பிறகு மேற்படி வாகனத்திற்கு நம்பர் வாங்குவதற்காக வாகன ஆய்வாளர் அலுவலகம் வந்ததாகவும் தெரிவித்தார். பணம் ரூ.1580/-க்கு சரியான விளக்கம் கூறாததால் அப்பணம் கைப்பற்றப்பட்டது. திரு.தமிழரசன், பணியாளர், செந்தில் மோட்டார்ஸ், கீரமங்கலம் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.13,340/- பணம் இருந்தது. மேலும் அவரிடம் விசாரிக்க காலையில் 9 இரு சக்கர வண்டிக்கு ஆன்லைனில் பதிவு e-Payment செய்ததாகவும், அது சம்மந்தமாக புரோகிராமரை பார்த்து லிஸ்ட் வாங்க வந்ததாகவும், அத்துடன் மோட்டார் வாகன ஆய்வாளரைப் பார்ப்பதற்காக நின்று கொண்டிருந்ததாகவும் கூறினார். அந்த பணம் ரூ.13,340/- ஜவுளி வாங்குவதற்காக எடுத்து வந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளதக்கதாக இல்லாததால் அப்பணம் ரூ.13,340/-க்கு சரியான விளக்கம் கூறாததால் அப்பணம் கைப்பற்றப்பட்டது.

இளநிலை உதவியாளர் திரு.வெங்கிடுசாமி என்பவரது அறையை சோதனை செய்ய அவரது இருக்கைக்கு அருகில் இருந்த கணினி மேஜையின் கீழ் ரூ.430/- மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அதை எடுத்து இளநிலை உதவியாளரிடம் விபரம் கேட்க அது என்னுடைய இருக்கை இல்லை என்றும், அலுவலக உதவியாளர் இருக்கை என்றும் கூறினார். அது பற்றி அலுவலக உதவியாளரிடம் கேட்க அந்த பணத்தை பற்றி தெரியாது என்றும், அவ்விருக்கை தன்னுடைய இருக்கை இல்லை என்றும் தெரிவித்தார். அந்த பணம் ரூ.430/-ம் கைப்பற்றப்பட்டது. மேற்படி இருக்கையின் வெளிப்புறம் கிழக்கு பக்கம் சோதனை செய்ய ரூ.400/- சிதறிக்கிடந்தது. அப்பணம் ரூ.400/-ம் கைப்பற்றப்பட்டது.

இச்சோதனையில் முடிவில் மேற்கண்ட நபர்கள் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை தவிர கூடுதலாக கட்டணத்தை பெற்றும், மேலும் அவர்களது பயிற்சிப்பள்ளிக்கு வரும் பொது மக்களிடம் கூடுதலாக கட்டணத்தை பெற்றும், அதை மோட்டார் வாகன ஆய்வாளருக்கும் மற்றும் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் கையூட்டாக கொடுத்து காரியத்தை சாதிப்பதற்காக வைத்திருந்த பணம் என்று தெரிய வந்ததின் பேரில் மேற்படி பணம் ரூ.1,35,219/-ம் கைப்பற்றப்பட்டது. எனவே மேற்படி நபர்களின் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் (கமலக்கண்ணன், துணை வட்டாட்சியர் மற்றும் ஆய்வுக்குழு அலுவலர், புதுக்கோட்டை).

மேற்படி புகார் மனுவை பெற்று இன்று 12.10.2017ஆம் தேதி காலை 10.00 மணிக்கு புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண். 08/2017 பிரிவு 102 கு.வி.மு.ச மற்றும் 13 (2) உ/இ 13 (1) (d) of PC Act-1988 ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. S/d. ரா.ரகுபதி, காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, புதுக்கோட்டை நாள்.12.10.2017. R. Raghupathi 12.10.17

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் மனுவையும் மற்றும் திடீர் ஆய்வு அறிக்கையையும் புதுக்கோட்டை தலைமை குற்றவியல் நீதிமன்றத்திற்கும், நகல்களை சம்மந்தப்பட்ட அலுவலகர்களுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பிற்கும் வைக்கப்பட்டது. R. Raghupathi DSP/VAC/Pdu 12.10.17